மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் ஆகியோர் மா.சுப்பிரமணியன் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் நேற்று (04.09.2025) திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம், மோரை, புதிய கண்ணியம்மன் நகர் பகுதியைச் சேர்ந்த டி.செல்லப்பன் என்பவர் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மூளைச்சாவடைந்து உடல் உறுப்பு தானம் செய்த 500வது கொடையாளருக்கு அரசு மரியாதை செலுத்துவதற்காக நேரில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரனி ராஜன், உடல் உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.கவிதா, மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு. பிரியா ராஜ் (திருவள்ளூர்). மரு.பிரபாகரன் (பூவிருந்தவல்லி) திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன், ஆவடி வட்டாட்சியர் கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி சோலை நகர் வடக்கு – தெற்கு பகுதிகளில் தூண்டில் முன் வளைவு அமைக்க வலியுறுத்தி தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன் மீனவர்களுடன் சென்று முதலமைச்சர் ரங்கசாமியை சட்டசபையில் நேரில் சந்தித்து மனு அளித்தார்.

பெரியார் விருது பெறும் கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு பாராட்டு!

முதல்வர் தலைமையிலான கழக அரசின் சாதனைகளை மகளிரிடம் கொண்டு செல்வோம்!

தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 5 -

தி.மு.க. மாநில மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, பிரச்சார குழு செயலாளர்கள், வலைதள பொறுப்பாளர்கள், ஆலோசனை குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (4.9.2025) மாலை 4.00 மணி அளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன் தலைமையில் மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப இராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாநில நிர்வாகிகள் அங்கயற்கண்ணி, சேலம் சுஜாதா, ரேகாபிரியதர்ஷினி, அமலு விஜயன், ராணி ரவிச்சந்திரன், விஜிலா சத்தியானந்த், யாழினி, ரத்னா லோகேஸ்வரன், வாசுகி ரமணன், தேன்மொழி, சத்யா பழனிக்குமார், டாக்டர் மாலதி, மாலதி நாகராஜ், ரியா, உமா மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதுபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்" என்றார் வான்புகழ் வள்ளுவர்,

அதற்கொப்ப, யார் யாருக்கு எது பொருத்தம், எவருக்கு ஒரு பொறுப்பினைத் தந்தால், அதைச் செவ்வனே நிறைவேற்றுவார் என பகுத்தறிந்து பார்த்து முடிவு செய்யும் ஆற்றலுக்குச் சொந்தக்காரர் நம்முடைய திராவிடல் மாடல் அரசின் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞரின் முத்தான மகள் கனிமொழியை, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக்கி, கழக மகளிர் அணிக்கு பெருமை சேர்த்தார் நம் கழகத் தலைவர். அது மட்டுமின்றி, துணைப் பொதுச்செயலாளர் ஆனாலும், தொடர்ந்து மகளிர் அணியை வழிநடத்தும் பொறுப்பினையும் தந்தார்.

இப்பொழுதோ, அனைத்துக்கும் மேலாக "பெரியார் விருதினை" இந்த முப்பெரும் விழாவில் கனிமொழிக்கு என்று அறிவித்திருக்கிறார். கனிமொழியைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்குத் தெரியும். அவர் மேடையில் பேசும்போது மட்டுமல்ல, மேடையை விட்டு கீழே இறங்கினாலும், அவர் நூற்றுக்கு நூறு பெரியாரை பின்பற்றுபவர் என்பது. இதை நன்கு அறிந்த காரணத்தால்தான், தன் தங்கை கனிமொழிக்கு "பெரியார் விருது" என அறிவித்து பெருமை சேர்த்திருக்கிறார் நம் கழகத் தலைவர் முதுலாமைச்சர் அவர்கள். அவருக்கு மகளிர் அணி சார்பில் உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

கனிமொழி எம்.பி., க்குப் பாராட்டு

இன்று சென்னை - நாளை தூத்துக்குடி - அதற்கடுத்தநாள் டெல்லி இதற்கிடையில் பல்வேறு ஊர்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் என ஓயாமல் சுற்றிச் சுழன்று ஆற்றிக் கொண்டிருக்கும் கழகப் பணிகள், இலக்கியப் பணிகள், சமூகப் பணிகள் என ஓயாத உழைப்பு.

தமிழர்களின் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்தில் கர்ஜனை. அதேநேரம் இந்திய எல்லையில் பஹல்காமில் தீவிரவாதிகளின் தாக்குதல் குறித்து, இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிநாட்டவர்க்கு விளக்க இந்தியப் பிரதிநிதியாக பல நாடுகளுக்குப் பயணம், தன் தூத்துக்குடி தொகுதியில் விமான நிலையத்தின் விரிவாக்கம், தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைவதற்கு பல்லாண்டு காலமாக தொடர்ந்து குரல் கொடுத்து வந்ததன் காரணமாக, தற்போது செயல் வடிவம் பெற்றுள்ளது.

வரலாறு காணாத வெள்ளம் தூத்துக்குடியை சூழ்ந்த நேரத்தில், தன் உயிரையும் பொருட்படுத்தாது, களத்தில் இறங்கி மக்களைக் காத்த தாயுள்ளம் கொண்டவர். சமூக நீதி, பெண்ணுரிமை போன்ற தலையாயப் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பவர்.

தன்னுடைய தூத்துக்குடி தொகுதியில் அரும்பெரும் முயற்சியால் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தூத்துக்குடியில் வின்பாஸ்ட் மின்சார கார் உற்பத்தி ஆலை தமிழ்நாடு முதமைச்சர் அவர்களால் சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கவையாகும்.

வருகிற செப்டம்பர்17 அன்று கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் "பெரியார் விருது" பெறும் கழக துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்களுக்கு தி.மு.க. மகளிர் அணி தனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்வதோடு, மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான கழக அரசின் சாதனைகளை அனைத்து மகளிரிடம் கொண்டு செல்ல பாடுபடுவோம்.

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான கழக அரசு செய்துள்ள சாதனைகள் எண்ணிலடங்கா. அதிலும், குறிப்பாக மகளிருக்காக கழக ஆட்சி செய்திருக்கும் சாதனைகள் பலப்பல. குறிப்பாக சிலவற்றை சொல்வதெனில்,

1) மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூபாய் ஆயிரம்.

2) மகளிருக்கு இலவச பேருந்து பயணம்

3) பணிபுரியும் மகளிர் தங்க "தோழி" விடுதிகள்.

4) தமிழகம் முழுவதும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச காலை சிற்றுண்டி

5) மூத்த மகளிர்க்கு இல்லம் தேடிச் சென்று ரேஷன் பொருட்கள் வழங்குதல்.

6) பெண்கள் உயர்கல்விக்காக மாதம் ரூ.1000/-

இவற்றையெல்லாம் தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் ஒவ்வொருவர் இடத்திலும் கொண்டு சேர்ப்பதோடு, கழக அரசுக்கு மகளிரின் மேலான ஆதரவைத் திரட்ட வேண்டும்.

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலையொட்டி நம் திராவிட மாடல் அரசின் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் மகளிருக்காக செய்துள்ள சாதனைகள் அவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் தி.மு.க. மகளிர் அணியின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இவற்றையெல்லாம் மனதில் நிறுத்தி, நம் மகளிர் அணி நிர்வாகிகள் செயலாற்றி, மீண்டும் கழக ஆட்சி மலர்ந்து இரண்டாவது முறையாக கழகத் தலைவர் தளபதி அவர்களின் முதலமைச்சராக்க பாடுபட உறுதியேற்போம்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' நிகழ்ச்சி நேற்று 04-09-2025 உத்திரமேரூர் ஒன்றியம் கருவேப்பம்பூண்டி ஊராட்சியில் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பொதுமக்களிடம் மனுக்கள் பெற்று, ஆய்வு மேற்கெண்டு பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., ஒன்றியக் குழுத் தலைவர் ஹமலதா ஞானசேகரன், ஒன்றியச் கழகச் செயலாளர் – ஒன்றியக் குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல், பேரூராட்சித் தலைவர் சசிகுமார், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கும்மிடிப்பூண்டி தொகுதி எல்லாபுரம் ஒன்றியம் கல்பட்டு, புன்னப்பாக்கம் பாகல்மேடு ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து மக்களின் கோரிக்கை மனுக்களை பதிவு செய்யும் செயல்முறையை நேரில் பார்வையிட்டு மனுதார்களுடன் உரையாடி துறை சார்ந்த அதிகாரிகளுடன் இணைந்து பொதுமக்களின் தேவைகளுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பிருமான டி. ஜெ.கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். உடன் ஆ.சத்தியவேல் மு.மணிபாலன் வெங்கடாச்சலம், வெங்கடேசன், பி.கே.நாரயணசாமி, கோவிந்தராஜ், மா.சிலம்பரசன், டி.மஸ்தான், குப்பன், தியாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தாயார் -

மறைந்த செ.முருகம்மாள் இறுதி ஊர்வலம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு – கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, செப். 5 -

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தாயார் செ.முருகம்மாள் அவர்கள் 3-9-2025 அன்று அதிகாலை வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்னாரது இறுதி ஊர்வலத்தில் கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

தகவல் அறிந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அன்பகம் கலை, மாவட்ட கழக செயலாளர்கள் ஆர்.டி.சேகர், நே.சிற்றரசு, மேயர் பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., சசிகாந்த் செந்தில் எம்.பி., வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி., பத்மநாபன் எம்.எல்.ஏ., கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், ப.ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பரந்தாமன். மற்றும் சந்துரு, பாலவாக்கம் விசுவநாதன், பி.கே.மூர்த்தி, தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, பகுதி செயலாளர்கள் எம்.சாமி கண்ணு, வெ.வாசு,

ஐ.சி.எப். வ. முரளிதரன், ராஜசேகர், சொ.வேலு, சுதாகர், கூ.பி. ஜெயின், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், க.ஜெயராமன், தி.நகர் ஏழுமலை, சரிதா மகேஷ்குமார், புலவர் சாமி நாகப்பன்

இரா. நரேந்திரன், இளைய அருணா, இரா. கருணாநிதி, புனிதவதி எத்திராசன், டி.லோகேஷ், பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், மு.சரவணன், அம்பேத்வளவன், இளம் சேகுவேரா, அ.ஜீவன், மனோகர், கிரி,தில்லை கதிரவன், கினார் ஆறுமுகம், உதயகுமார், ஆர்.ராஜன் புல்லட் கி.ரமேஷ், புவனவதி, வட்ட கழக செயலாளர்கள் எஸ்.புஷ்பராஜ்,

எம்.இசட்.அபோய், எம்.ஏ.டீக்கா மா. ருத்ரமூர்த்தி, ஜி.கிருஷ்ணகுமார், பரிமளா சுரேஷ். கே.தினகரன், பெரம்பூர் மகேஷ், வி.ஜெகன், க.எழிலன். செபாஸ்டின், வெ.இன்பா, முனிசிவா, சே.மணி மாறன், முகமது ரஃபி, சரன்ராஜ், நிறைமொழி, மனோஜ், ஜெ. அண்ணாதுரை, ஈ.எஸ்.ரவிசந்திரன், ரமேஷ், சுரேஷ், சிவகுமார், ஜெகதீசன், செல்வி, வினோத், வனஜா சன்முகம், த.கருணாநிதி,

அ.கருணா, பிரேம், நாராயணன், நிலவழகன் சீனிவாசன், பகவத்சிங், அருள், பாலா, ஜெகதீஷ், நரேஷ், அந்தோனி, மற்றும் உறவினர்கள் சாரதா தமிழ்வேந்தன், தமிழ் செல்வி, ஜெயலஷ்மி, செல்வமணி, த.அன்பழகன், பார்த்திபன், தமிழ் பூரணி, தமிழ் முகிலன் வனிதா, எழிலரசி, இந்துமதி, தேன்மொழி, கனிமொழி, காமராஜ், மதன்ராஜ், மௌனிகா, தீபக், ஆகாஷ், சிலம்பரசன், கவிவேந்தன்,முகிலரசன், தருண்குமார், தாரணி, காலியா, தமிழ் நிதி, தமிழ்மித்ரன், தமிழ்தாரகை, தமிழ் தீரன், தமிழ் துருவன், நித்ரன், மற்றும் ஏராளமான கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் நேற்று 4-9-2025 மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

தஞ்சை, செப். 05 -

தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களை உள்ளடக்கிய கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற (07.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 4 மணியளவில் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுபோது தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய மாவட்டம், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்குட்பட்ட கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட தலைவர், துணை தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :- நடைபெறவுள்ள முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பாக.

இவ்வாறு தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பூண்டி மேற்கு ஒன்றியம் பட்டரை பெரும்புதூர் ஊராட்சி வரதாபுரம் கிராமத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 12.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டடத்தை அமைத்து மக்கள் பயன்பாட்டிற்காக திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் திறந்து வைத்து உணவுப் பொருட்கள் வழங்கும் பணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் உணவுப் பொருள் வழங்கும் துறை சார்ந்த அலுவலர்கள் பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டிபாபு, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா.மோதிலால், ஒன்றியக் கழக நிர்வாகிகள் அ.ஆனந்தராஜ், ஈ. இலட்சுமணன், பி. தேவேந்திரன், ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் சுபாஷினி பாஸ்கரன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வழக்கறிஞர் எஸ்.சதீஷ், மாணவரணி எம். எம். லிங்கேஷ் குமார், வர்த்தகரணி இன்பா, கிளை கழக செயலாளர்கள் தேசய்யா, லோகநாதன், கன்னியப்பன், ரமேஷ், நாகபூஷணம், கிளை பிரதிநிதிகள் எம். இராமகிருஷ்ணன், தட்சிணாமூர்த்தி, துரைப்பாண்டி, வரதாபுரம் பாஸ்கர், தோமூர் ஜெயக்குமார் உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 49வது வார்டு ஜி.ஏ.சாலை, Y.M.C.A வணிக வளாகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. முகாமில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐ.ரீம் இரா. மூர்த்தி கலந்துகொண்டு, அனைத்து துறைகளிலும் பொதுமக்களின் மனுக்கள் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து, தீர்வு காணப்பட்ட மனுக்களை உடனடியாக பொதுமக்களுக்கு வழங்கினார். மேலும் மீதமுள்ள மனுக்கள் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்று அரசு அதிகாரிகளிடம் தெரிவித்தார். இந்நிகழ்வில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் செந்தில் குமார், வட்டச் செயலாளர்கள் சதீஸ்குமார், கலைச்செல்வன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உடனிருந்தனர்.